# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் நவம்பர் மாத கூட்டம் 18.11.2021 ஆம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, செயல்முறைகள் ந.க.எண்.7979/2020/LA3 நாள் 30.06.2021-ல் தெரிவிக்கப்பட்டுள்ள படி, இந்நகராட்சிக்கு 15-வது நிதிக்குழு மானியம் : 2020-21 Un Tied Grant-ன் கீழ் Ist & IInd installment -ல் ரூ.67,50,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| S.No | Name of the Work | Estimate Amount |
|---|---|---|
| 1. | Construction of Retaining wall at Pampoori Vaikkal karai Breach portion at Vaikkal Street End portion in Colachel Municipality | 9,60,000/- |
| 2. | Construction of Retaining wall at Matha colony to Kalimar road at jointing place of Pampoori Vaikkal in Colachel Municipality | 29,00,000/- |
| 3. | Providing 90mm PVC pipeline at Port street in Ward No.14, 90mm PVC pipeline at Asarimar street in Ward No.3,4, 110mm PVC pipeline at kulanthaiyesu colony in Ward No.4, 90 mm PVC line at Panthavilai in Ward No.22 | 6,90,000/- |
| 4. | Providing 90mm PVC Pipeline at Sampasivapuram bridge to Yesudhas colony in Ward No.7,8, 90 mm PVC pipeline at Sasthankarai Main road in Ward No.23, 90 mm PVC pipeline at Vannathivilai in Ward No.24, 90 mm PVC pipeline at Andipillai street in Ward No.4, 90mm PVC pipeline at Pookuzhi in Ward No.17 | 7,10,000/- |
| 5 | Construction of retaining wall and forming the road at Singankavu to Narikkal road in Ward No. 23 | 9,50,000/- |
| 6 | Providing paver block at Port street No.1 near Pozhimugam in Ward No.14 | 5,50,000/- |
| | **Total** | **67,60,000/-** |

மேற்காணும் பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.67,60,000/-ல் திட்ட நிதி ஒதுக்கீட்டுத் தொகை (15th CFC Grand (Un Tied grant) Ist & IInd Instalment) ரூ.67,50,000/- போக மீதமுள்ள தொகை ரூ.10,000/- ஐ நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1338/2021/இ1

**தீர்மானம் எண்.2599 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, செயல்முறைகள் ந.க.எண்.20543/2021/P2 நாள் 16.11.2021-ன் படி, குளச்சல் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021-22-ன் கீழ், ரூ.115.28 இலட்சம் மதிப்பீட்டில் 1 சிப்பம் கீழ்க்கண்ட மண் சாலைப்பணிகளை பேவர் பிளாக் சாலைப்பணிகளாக மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| Sl. No. | Package No. | Name of the work | Length in Km | Width in m | Estimated Amount (Rs. in Lakh) |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | Sasthankarai to Carmal Jothi School Road Cross Street 1&2 in Ward No.1 148001S001 | 0.068 | 4.00 | 115.28 |
| 2 | | Old Singaravelan Colony-1 in ward No.4 148004L033 | 0.130 | 3.00 | |
| 3 | | Old Singaravelan Colony-2 in ward No.7 148007L037 | 0.152 | 3.00 | |
| 4 | | Old Singaravelan Colony-3 in ward No.7 148007L038 | 0.051 | 1.50 | |
| 5 | | Maramadi Street-3 in ward No.8 148008L041 | 0.270 | 1.00 | |
| 6 | | Maramadi Street-3 in ward No.8 148008L043 | 0.072 | 1.00 | |
| 7 | | Maramadi Street-3 in ward No.9 148009L048 | 0.012 | 1.00 | |
| 8 | | Maramadi Street-3 in ward No.9 148009L049 | 0.048 | 1.00 | |
| 9 | | Vaikkal Street -1 in Ward No.15 148015S039 | 0.140 | 3.00 | |
| 10 | | Vaikkal Street -2 in Ward No.15 148015L076 | 0.182 | 4.00 | |
| 11 | | Vaikkal Street-2 in Ward No.16 148016S042 | 0.310 | 4.00 | |
| 12 | | Ezhakanivilai Street in ward No.18 148018S048 | 0.108 | 4.00 | |
| 13 | | Singankavu Cross Road-1 in ward No.23 148023L108 | 0.300 | 3.00 | |
| 14 | | Singankavu Cross Road-2 in ward No.23 148023L109 | 0.206 | 3.00 | |
| 15 | | Pullanvilai Cross Street in Ward No.23 148023L111 | 0.105 | 2.00 | |
| | | Total | **2.154** | | **115.28** |

மேற்காணும் விவரங்கள் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1846/2021/இ1

**தீர்மானம் எண்.2600 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.3

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, செயல்முறைகள் ந.க.எண்.20543/2021/P2 நாள் 16.11.2021-ன் படி, குளச்சல் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் : 2021-22-ன் கீழ், வார்டு எண்.7-ல் இந்திரா காலனி பகுதியில் மதிப்பீட்டுத் தொகை ரூ.49.00 இலட்சத்தில் புதியதாக பூங்கா அமைப்பதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

. ந.க.எண்.1051/2/2021/இ1

**தீர்மானம் எண்.2601 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.4

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, செயல்முறைகள் ந.க.எண்.7979/2020/LA3 நாள் 30.06.2021-ல் தெரிவிக்கப்பட்டுள்ள படி, இந்நகராட்சிக்கு 15-வது நிதிக்குழு மானியம் : 2020-21 Un Tied Grant-ன் கீழ் Ist & IInd installment -ல் ரூ.70,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| S.No | Name of the Work | Estimate Amount |
|---|---|---|
| | Tied | |
| 1 | Construction of 2 lakh litre capacity Sump and Providing Pipe line linking to Sump, Borewell and OHT at Palathankarai near Vellipillayar kovil in Colachel Municipality | 45.00 |
| | Sub Total | 45.00 |
| | Un Tied | |
| 1 | Purchase of increnator, Bailing machine, Sieving machine for Solid waste management purpose in Colachel Municipality | 14.00 |
| 2 | Construction of drainage at Telephone Exchange road near Veterinary Hospital in Colachel Municipality. | 5.50 |
| 3 | Providing paver block at UELC Colony road in Colachel Municipality | 9.00 |
| | Sub Total | 28.50 |
| | Total | **73.50** |

மேற்காணும் பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.73,50,000/-ல் திட்ட நிதி ஒதுக்கீட்டுத் தொகை (15$^{th}$ CFC Grand (Tied & Un Tied grant) I$^{st}$ & II$^{nd}$ Instalment) ரூ.70,00,000/- போக மீதமுள்ள தொகை ரூ.3,50,000/- ஐ நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1339/2021/இ1

**தீர்மானம் எண்.2602 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.5

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (என்.எஸ்) துறை அரசாணை (Ms) எண். 71 நாள் 13.01.2021-ன் படி, இந்நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2021-22-ன் கீழ், பொது மக்கள் பங்களிப்புடன் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் பொது மக்கள் பங்கேற்புடன் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டதில், ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில், (அரசு நிதி ரூ.3.92 இலட்சம் + பொது மக்கள் பங்களிப்பு ரூ.4.08 இலட்சம்) வார்டு எண்.9 புனித அந்தோணியார் சிற்றாலயம் முன்புறம் மற்றும் இரு பக்கங்களில் பேவர் பிளாக் பதித்தல் பணியினை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டு, திரு.எல்.ரெக்சன் என்பவரால் பொது மக்கள் பங்களிப்பு தொகை ரூ.4.08 இலட்சம் தொகையினை வழங்குவதற்கு ஒப்புகொள்ளப்பட்டது. அதன்படி, மேற்படி தொகை ரூ.4.08 இலட்சம் வங்கி கேட்பு வரைவோலை எண்.965279 நாள் 20.10.2021, இந்தியன் வங்கி குளச்சல் கிளையின் மூலம் வழங்கப்பட்டுள்ளதால், மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு ஏதுவாக அரசு நிதி ரூ.3.92 இலட்சம் தொகையினை திட்ட நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்க கேட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைக்குமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் எண்.ந.க.எண்.வ2/35493/2021 நாள் 22.10.2021-ன் படி, மேற்படி பணிக்கு திட்ட நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு ஏதுவாக அரசு நிதி ரூ.3.92 இலட்சம் தொகையினை திட்ட நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்க கேட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1845/2021/இ1

**தீர்மானம் எண்.2603 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.6

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21287/2021/EA2 நாள் 02.10.2021-ம் தேதிய கடிதத்தின்படி, வெளிக்கொணர்வு முகமை மூலம் குடிநீர் பணிகளுக்கு பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவு கோல்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சி குடிநீர் வினியோக பணிகளுக்கு தேவைப்படும் பணியாளர்கள் குறித்த விவரம் பின்வருமாறு,

| Sl.No | Items | Requirement as per norms | Present Strength | Balance needed |
|---|---|---|---|---|
| 1 | Maintenance Assistant (OHT, Sump & Pipeline Maintenance works) | 12 | - | 12 |
| 2 | Electrician Grade II | 3 | 1 | 2 |
| 3 | Maintenance Assistant (Pump room ) | 3 | - | 3 |
| | Total | 18 | 1 | 17 |

மேற்காணும் அளவுகோலின் அடிப்படையில், இந்நகராட்சி குடிநீர் வினியோக பணிகளுக்கு தேவைப்படும் Electrician Grade II, Maintenance Assistant (OHT, Sump & Pipeline)- Maintenance Assistant (Pump room ) Maintenance Worker ஆகிய 17 எண்ணம் பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை (Outsourcing) மூலம் ஓர் ஆண்டிற்கு பணியமர்த்துவதற்கான உத்தேச தொகை ரூ.43.22 இலட்சம் ஆகும். (ஊதியச் செலவினம் ரூ.36.47 இலட்சம், சரக்கு மற்றும் சேவை வரி (GST) மற்றும் இதர செலவுகள் உட்பட ரூ.6.75 இலட்சம்). அதனடிப்படையில், மூன்று ஆண்டுகளுக்கான உத்தேச செலவினம் ரூ.129.66 இலட்சம் தொகையினை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் முதன்மை அனுமதி பெறுவதற்கு கருத்துரு சமர்ப்பிக்க, மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1169-1/2021/இ2

**தீர்மானம் எண்.2604 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.7

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21287/2021/EA2 நாள் 02.10.2021-ம் தேதிய கடிதத்தின்படி, வெளிக்கொணர்வு முகமை மூலம் தெருவிளக்கு பணிகளுக்கு பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவு கோல்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சி தெருவிளக்கு பணிகளுக்கு தேவைப்படும் பணியாளர்கள் குறித்த விவரம் பின்வருமாறு,

| Sl.No | Items | Requirement as per norms | Present Strength | Balance needed |
|---|---|---|---|---|
| 1 | Wireman | 3 | 1 | 2 |
| 2 | Wireman Helper | 3 | 1 | 2 |
| | TOTAL | 6 | 2 | 4 |

மேற்காணும் அளவுகோலின் அடிப்படையில், இந்நகராட்சி தெருவிளக்கு பணிகளுக்கு பணிகளுக்கு தேவைப்படும் Wireman, Wireman Helper ஆகிய 4 எண்ணம் பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை (Outsourcing) மூலம் ஓர் ஆண்டிற்கு பணியமர்த்துவதற்கான உத்தேச தொகை ரூ.10.79 இலட்சம் ஆகும். (ஊதியச் செலவினம் ரூ.9.10 இலட்சம், சரக்கு மற்றும் சேவை வரி (GST) மற்றும் இதர செலவுகள் உட்பட ரூ.1.69 இலட்சம்). அதனடிப்படையில், மூன்று ஆண்டுகளுக்கான உத்தேச செலவினம் ரூ.32.37 இலட்சம் தொகையினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் முதன்மை அனுமதி பெறுவதற்கு கருத்துரு சமர்ப்பிக்க, மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

. ந.க.எண்.1169-1/2021/இ2

**தீர்மானம் எண்.2605 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.8

இந்நகராட்சி பகுதிகளில் 13.11.2021 மற்றும் 14.11.2021 ஆகிய இரண்டு நாட்களில் பெய்த கனமழையின் காரணமாக ஏ.வி.எம் கால்வாய் நிறைந்து குடியிருப்புகளுக்குள் மழை நீர் சென்று விட்டது. மேலும் 13.11.2021 அன்று இரவு நரிக்கல் பகுதியில் பாம்பூரி வாய்க்காலில் உடைப்பு ஏற்பட்டால், சிங்கன்காவு மற்றும் நரிக்கல் பகுதிகளிலுள்ள வீடுகளுக்குள் மழை நீர் புகுந்ததுடன். களிமார் பகுதியில் சிங்கன்காவு ஓடைக்குள் ஒரு வீடும் இடிந்து விழுந்து விட்டதால், அப்பகுதியிலும் மழை நீர் குடியிருப்புகளுக்குள் சென்றதை தொடர்ந்து, பொது மக்கள் நலன் கருதி, 14.11.2021 அன்று அதிகாலை 4.00 மணிக்கு தீயணைப்பு வீரர்கள் வரவழைக்கப்பட்டு, வெள்ளம் சூழ்ந்த பகுதியிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு, முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். இந்நிலையில் 14.11.2021 அன்று ஏ.வி.எம் கால்வாயில் கொட்டில்பாடு முதல் பள்ளி முக்கு வரை மற்றும்மழை நீர் கடலில் சேரும் இடமான வெள்ளமணல் மற்றும் துறைமுகத்தெரு பொழிமுகம் ஆகிய இடங்களில் 2 JCB கொண்டு அடைப்புகள் எடுத்து விடப்பட்டது. அதன் பின்னர் பாம்பூரி வாய்க்காலில் அதிக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால், குடியிருப்புகளுக்குள் அதிக அளவில் மழை நீர் சென்றதை தொடர்ந்து, 15.11.2021 அன்று 4 எண்ணம் JCB இயந்திரங்களை கொண்டு பாம்பூரி வாய்க்கால் அருகிலுள்ள சாலை 2 இடங்களில் துண்டிக்கப்பட்டது. மேற்படி பணிகள் அனைத்தும் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்ந்ததாரர் திரு.சி.தேவகரின் சேம் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேற்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்ட வகையில் 14.11.2021 முதல் 16.11.2021 வரை வழங்கப்பட வேண்டிய தொகைக்கான கணக்கீட்டு விவரம் பின்வருமாறு,

| | | | |
|---|---|---|---|
| 14.11.2021 | காலை 6.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை மற்றும் மதியம் 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை<br>2 எண்ணம் JCB | 10 X 2 = 20 மணி நேரம் X 1 மணி நேரத்திற்கு ரூ.780/- வீதம் | ரூ.15,600/- |
| 15.11.2021 | காலை 8.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை மற்றும் மதியம் 3.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை<br>4 எண்ணம் JCB | 8 X 4 = 32 மணி நேரம் X 1 மணி நேரத்திற்கு ரூ.780/- வீதம் | ரூ.24,960/- |
| 16.11.2021 | காலை 8.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை மற்றும் மதியம் 3.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை<br>1 எண்ணம் JCB | 6 X 1 = 6 மணி நேரம் X 1 மணி நேரத்திற்கு ரூ.780/- வீதம் | ரூ.4,680/- |
| **மொத்தம்** | | **58 மணி நேரம் X ரூ.780/-** | **ரூ.45,240/- Restricted to Rs.45,000/-** |

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில், பட்டியல் தொகை ரூ.45,000/-ஐ திரு.சி.தேவகரின் சேம் ஒப்பந்ததாரருக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1221-7/2021/இ1

**தீர்மானம் எண்.2606 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.9

இந்நகராட்சிக்குட்பட்ட மரமடி பகுதியில், தூய அந்தோணியார் சிற்றாலயம் முன்புறம் அமைந்துள்ள பொது கழிப்பிடம் பொது மக்களுக்கும், ஆலயத்திற்கும் இடையூறாக அமைந்துள்ளதால், அதனை இடித்து அகற்றுமாறு புனித காணிக்கை மாதா ஆலய பங்கு தந்தையால் கோரிக்கை வைக்கப்பட்டது. மேலும் தற்போது மேற்படி கழிப்பிடத்தின் அருகில் அமைந்துள்ள அனைத்து வீடுகளிலும் கழிவறை உள்ளதால், மேற்படி கழிப்பிடம் பயன்பாடின்றி உள்ளதை கருத்தில் கொண்டு, அதனை இடித்து மாற்றுவதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1221-3/2021/இ1

**தீர்மானம் எண்.2607 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.10

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், தகவல் தொழில் நுட்ப துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அனைத்து வீடுகளிலிருந்தும் வரும் கழிவு நீரை, நகராட்சி மழைநீர் வடிகாலின் மூலம் வெளியேற்றுவதை தவிர்க்கும் பொருட்டு, அந்தந்த வீடுகளில் உறிஞ்சு குழி (Leach pit) அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. மேலும் நகராட்சி அலுவலகத்தில் மாதிரி உறிஞ்சு குழி (Model Leach pit) அமைக்கவும் அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து, நகராட்சி அலுவலக வளாகத்தில் மாதிரி உறிஞ்சு குழி அமைக்கும் பணியினை ரூ.8,500/- மதிப்பீட்டில், நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1221-1/2021/இ1

**தீர்மானம் எண்.2608 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.11

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 74 V 3530-ல் டீசல் டேங்க் மற்றும் டீசல் பில்டர் கிளீனிங் செய்த வகையிலும், டீசல் டேங்க் முதல் இஞ்சின் வரை உள்ள மெயின் டீசல் பைப், யூனியன் வாசர் கிட் ஆகியவை M/s.Ganesh Motors, Nagercoil மூலம் மாற்றிய வகையில் ரூ.1500/- பட்டியல் எண்.156 நாள் 01.10.2021-ன் படி திரு.என்.செல்வகுமார் ஓட்டுநரால் செலவு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை அன்னாருக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.5030/2010/இ1

**தீர்மானம் எண்.2609 அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்.12

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் 02.10.2021-ம் தேதிய ந.க.எண்.21287/2021/EA2ல் வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த அளவுகோலின்படி இந்நகராட்சிக்கு கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

| Sl. No. | Items | Requirement as per norms | Present Strength | Balance needed |
|---|---|---|---|---|
| 1 | **BOV** | **11** | **12** | **-** |
| 2 | **LCV** | **5** | **2** | **3** |
| 3 | **HCV** | **1** | **1** | **-** |
| 4 | **Tractor** | **-** | **-** | **-** |
| 5 | **Bobcat /JCB** | **0** | **-** | **0** |
| 6 | **Cleanliness Worker** | **72** | **29** | **43** |
| 7 | **Supervisor** | **12** | **4** | **8** |
| 8 | **Driver** | **6** | **3** | **3** |

இதன்படி மேற்படி பணியாளர்களை மூன்றாண்டுகளுக்கு தொடர்ந்து பணியமர்த்தும் போது ஏற்படும் ஓராண்டுக்கான உத்தேச செலவினம் பின்வருமாறு:

| Sl. No | Name of the Post | Basic Salary per day per person as per SoR or as approved in Rs. | Total salary per day per person ( col No.3 * 1.4251) Rs. | Total salar y per mont h per person Rs. | Total salary per annum per person Rs .in lakhs | No. of person to be engaged | Total Budget to be provide d per year Rs in Lakhs | Total Value to be put in to tender Rs. In lakhs |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | Sanitary worker | 461 | 546.33 | 16390 | 1.97 | 43 | 84.57 | - |
| 2 | supervis or | 562 | 666.02 | 19981 | 2.40 | 8 | 19.19 | - |
| 3 | Driver | 708 | 839.05 | 25172 | 3.02 | 3 | 09.06 | - |
| **Total** | | | | | | | **112.82** | |

எனவே குளச்சல் நகராட்சிக்கு தேவைப்படும் **தூய்மை பணியாளர்கள்** 43நபர்கள், **மேற்பார்வையாளர்கள்** 8**நபர்கள்** மற்றும், **ஓட்டுநர்கள்** 3**நபர்கள்,ஆகியோர்களை**

வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் முதன்மை அனுமதி பெற்று பணியமர்த்தி கொள்ளவும், இதன் பொருட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஏற்படும் உத்தேச தொகை (112.82*3)**ரூ.338.46** இலட்சம் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.168/2021/எச்/1

**தீர்மானம் எண்.2610 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.13

இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி மற்றும் இதர வரி இனங்களை பொது மக்கள் செலுத்தக்கோரி ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் செய்வதற்கு 22.09.2021 அன்று பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளி குறித்த விவரம் பின்வருமாறு,

1. M/s. லீலா சவுண்ட்ஸ், குளச்சல், நாள் ஒன்றுக்கு ரூ.1450/-

2. M/s. அக்ஷயா பந்தல் அமைப்பு சவுண்ட்ஸ், குளச்சல் நாள் ஒன்றுக்கு ரூ.1500/-

மேற்படி இரண்டு விலைப்புள்ளிகளில் M/s. லீலா சவுண்ட்ஸ், குளச்சல், நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளது. எனவே மேற்படி நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4826/2017/அ1

**தீர்மானம் எண்.2611அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.14

இந்நகராட்சிக்குட்பட்ட பள்ளி ரோட்டில் பெரிய பள்ளி அருகில், 15-வது நிதிக்குழு மானிய நிதி (Tied Grant) 2020-21-ன் கீழ், ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் குழாய் பதித்தல் பணி மேற்கொள்ளப்பட்டதில், சாலைப்பகுதிகள் சேதமடைந்திருந்த நிலையில், அதனை தொடர்ந்து கனமழையின் காரணமாக ஆங்காங்கே பெரிய பள்ளங்கள் ஏற்பட்டு, போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் மிகுந்த இடையூறு ஏற்பட்டு வருகிறது. இதனால் குண்டும், குழியுமாக இருக்கும் சாலையில் வாழை நடும் போராட்டம் நடத்த உள்ளதாக அப்பகுதி பொது மக்களால் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்பட்டது. எனவே பொது நலன் கருதி, மேற்படி பள்ளி ரோட்டில் சேதமடைந்துள்ள தார் சாலையில் ஒட்டு பணிகளை (BT Patchwork) ரூ.4,80,000/- மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1221-9/2021/இ1

**தீர்மானம் எண்.2612 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.14

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு பகுதியில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, குளச்சல் அலுவலக கட்டுப்பாட்டில் உள்ள குளச்சல் மீன்பிடி துறைமுகத்தின் வெளிப்பகுதியில் உள்ள வீடுகளிலிருந்து கழிவு நீர் துறைமுகத்தின் உட்பகுதியில் புகுந்து, ஆங்காங்கே தேங்கி துர்நாற்றம் வீசுவதால், துறைமுகப் பயனீட்டார்கள், பொது மக்கள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து பெருமளவில் புகார்கள் வரப்பெற்றுள்ளதால், பொதுக்கழிவு நீர் துறைமுகத்தின் உட்பகுதியில் புகாதவாறு தனியாக ஓடை அமைக்க மீன்வளம் (ம) மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், குளச்சல் கடிதம் ந.க.எண்.4840/ஆ/2021 நாள் 11.11.2021-ன் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில், மேற்படி பகுதியில் நேராய்வு மேற்கொள்ளப்பட்டதில், மரமடி பகுதியில் உள்ள குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் (ம) மழை நீர் மீன்பிடி துறைமுகம் அமைக்கும் முன்பே, தற்போது செல்கின்ற இடத்தின் வழியே சென்று கடலில் கலந்து வந்த நிலையில், துறைமுக கட்டுமான பணியின் போது வடிகால் ஓடை உடைக்கப்பட்டதால், கழிவு நீர் வெளியேறுவதற்கு வழியின்றி துறைமுகத்தின் உள்ளே தேங்கி, சுகாதார சீர்கேடு ஏற்படும் வகையில் உள்ளது. மேற்படி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வடிகால் ஓடையின் வட்டத்தை மாற்றி, புதிததாக வடிகால் ஓடை அமைத்தால் மட்டுமே துறைமுகத்தின் உட்புறம் கழிவு நீர் செல்வதை தவிர்கக முடியும். ஆனால் நகராட்சி நிலை திருப்திகரமாக இல்லாதததால், மேற்படி பகுதியில் சுகாதார சீர் கேடு ஏற்படுவதை தவிர்க்கும் வகையில், மீன்பிடி துறைமுகத்தின் அருகில் கழிவு நீர் செல்லும் இடத்தில் உறிஞ்சு குழி ,. அமைத்தல் மற்றும் தற்போது பெய்த கன மழையால் இராஜாக்கமங்கலம் மெயின் ரோட்டில் Checkpost அருகில் வடிகால் ஓடையில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால், அவசர அவசியம் கருதி, வடிகால் ஓடையை உடைத்து அடைப்பு சரி செய்தல் ஆகிய பணிகளை ரூ.3,40,000/- மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1336/2021/’இ1

**தீர்மானம் எண்.2613 அனுமதிக்கப்படுகிறது**

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் நவம்பர் மாத சாதாரணக்கூட்டம் 26.11.2021 ஆம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சியில் பயன்பாட்டிலுள்ள 5KVA மற்றும் 3 KVA UPS களின் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (AMC) முறையே 02.11.2021 மற்றும் 05.11.2021 -ல் முடிவடைவதால், மேலும் ஓராண்டுக்கு ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்காக மேற்படி UPS களின் உற்பத்தியாளரான Novateur Electrical & Digital Systems Private Limited நிறுவனத்திடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே, அலுவலக பணிகளில் மேற்படி UPS களின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, AMC காலத்தை தொடர்ந்து ஓராண்டுக்கு முறையே 03.11.2021 முதல் 02.11.2022 மற்றும் 06.11.2021 முதல் 05.11.2022 வரையும் கீழ்காணும் கட்டணத்தின்படி, நீட்டிப்பு செய்வதற்கும் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தத்தை Novateur Electrical & Digital Systems Private Limited நிறுவனத்திற்கு வழங்குவதற்கும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. 5KVA UPS 03.11.2021 முதல் 02.11.2022 ரூ.8850/-

2. 3KVA UPS 06.11.2021 முதல் 05.11.2022 ரூ.6490/-

**மொத்தம் ரூ.15340/-**

ந.க.எண்.3562/A2/2007

**தீர்மானம் எண்.2614 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

இந்நகராட்சி திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரத்தை கீழ்க்காணும் நாளிதழ்களின் சிறப்பு மலரில் வெளியிட்ட வகையில் அதற்கான விளம்பர கட்டணத்தை செலுத்த கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு,

| வ..எண். | நாளிதழ் பெயர் (ம)பதிப்பு விவரம் | பதிப்பு நாள் | பட்டியல் எண் | தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | M/s.Malar Publications, Pvt. Ltd, Nagercoil<br>Maalai Malar - Deepavai Malar 2021 | 02.11.2021 | NGL D2 1110035 | 9,912/- |
| 2. | M/s. Malai Murasu<br>Tirunelveli<br>Industrial Supplement : 2021 | 24.11.2021 | AD 21 220504 | 9,975/- |

மேற்காணும் தொகையினை சம்மந்தப்பட்ட பத்திரிக்கை நிறுவனங்களுக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2045/2012/இ1

தீர்மானம் எண்.2615 அனுமதிக்கப்படுகிறது

## பொருள் எண்.2

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கடை எண்கள். 13,14,18,22,36,37,39 கலைஞர் கருணாநிதி வணிகவளாக கடை எண்கள் 6,33 முதல் 40,47 முதல் 52, 57 முதல் 64 கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்கள்.25,27,32 மற்றும் நவீன மீன்சந்தை தரைதளம் 3,4,6,7 முதல் தளம் 6 ஆகிய கடைகளுக்கு 25.11.2021 அன்று பொது ஏலம் நடைபெற்றது. பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம் பின்வருமாறு,

**காமராஜர் பேருந்து நிலைய கடை எண்.18**

| வ. எண் | ஏலத்தாரர் பெயர் | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி (மாதம் 1/-க்கு) ஜி.எஸ்.டி தவிர | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் ஏலத்தாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | T.பத்மகுமார் | 2200/- | 2200/- (T.பத்மகுமார்) |

**கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்.27**

| | | | |
|---|---|---|---|
| 1. | S.கிங்ஸ்லி மில்ட்டன் ராஜ் | 2000/- | 2000/- (S.கிங்ஸ்லி மில்ட்டன் ராஜ்) |

கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை. மேற்படி கடை எண்.3-க்கு பொது ஏலத்தில் ஒரே ஒரு நபர் மட்டுமே கலந்து கொண்டார். கடைக்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக கலம் (4)-ல் கொடுக்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி மன்றத்தின் பார்வைக்கும், ஏலம் போகாத காமராஜர் பேருந்து நிலைய கடை எண்கண்.13,14,22,36,37,39 கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்கள்.6,33 முதல் 40,47 முதல் 52,57 முதல் 64, கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்கள்.25,32 மற்றும் நவீன மீன்சந்தை தரைதளம் 3,4,6,7 முதல் தளம் 6 ஆகிய கடைகளை மறு ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.01/2020/அ3

தீர்மானம் எண்.2616 அனுமதிக்கப்படுகிறது

## பொருள் எண்.3

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை செயல்முறைகள் ந.க.எண்.27519/2021/P2-2 நாள் 24.11.2021-ன் படி, இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9-ல் மரமடி புனித அந்தோணியார் சிற்றாலயம் முன்புறம் மற்றும் இருபக்கங்களிலும் பேவர் பிளாக் பதித்தல் பணியினை ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் (அரசுநு நிதி ரூ.3.92 இலட்சம் + பொது மக்கள் பங்களிப்பு ரூ-4.08 இலட்சம் ) மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மேற்படி விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.2617 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.4

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி மூலம் R.R.எண்டர்பிறைசஸ் நிறுவனத்திற்கு குத்தகை காலம் 01.12.2020 முதல் 30.11.2021 வரை ஓர் ஆண்டு முடிவடைகிறது. குத்தகை உரிமத்தை மேலும் ஓர் ஆண்டிற்கு உரிமம் நீட்டிப்பு செய்வதற்கு குத்தகை தொகை ரூ.42,400/-ல் 5% வரி உயர்வு செய்து கீழ்காணும் விபரப்படி குத்தகை உரிமம் மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| குத்தகை தொகை | - | 42400/- |
| குத்தகை தொகையில் 5% வரி உயர்வு | - | 2120/- |
| சேவை வரி 18% | - | 8014/- |
| தொழில் வரி | - | 2500/- |
| **மொத்தம்** | - | **55034/-** |

ந.க.எண்.236/2017/அ1

**தீர்மானம் எண்.2618 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.5

இந்நகராட்சி பகுதியில் 13.11.2021 அன்று பெய்த கனமழையினால் பாம்பூரி வாய்க்கால் உடைவு ஏற்பட்டு நரிக்கல், வாய்க்கால் தெரு, சிங்கன்காவு, பூக்குழி மக்கள் குடியிருக்க முடியாத சூழ்நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி, தேவையான வசதிகளை செய்து கொடுக்கப்பட்டது. அதன்படி, குளச்சல் அரசு நடுநிலைப்பள்ளியில் பாதிக்கப்பட்ட 60 பேர் தங்க வைத்து காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு மற்றும் டீ, காபி போன்றவற்றிற்கான செலவினம் பின்வருமாறு,

| வ.எண் | நாள் | செலவினம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 14.11.2021 | மளிகை பொருட்கள் | 4961/- |
| 2 | 15.11.2021 | மளிகை பொருட்கள் | 2595/- |
| 3 | 16.11.2021 | மளிகை பொருட்கள் | 2880/- |
| 4 | 17.11.2021 | மளிகை பொருட்கள் | 3207/- |
| 5 | 14.11.2021 | காய்கறிகள் | 3350/- |
| 6 | 15.11.2021 | காய்கறிகள் | 2941/- |
| 7 | 16.11.2021 | காய்கறிகள் | 2383/- |
| 8 | 17.11.2021 | காய்கறிகள் | 3509/- |
| 9 | 14.11.2021 | பால் | 728/- |
| 10 | 15.11.2021 | பால் | 728/- |

| | | | |
|---|---|---|---|
| 11 | 16.11.2021 | பால் | 728/- |
| 12 | 17.11.2021 | பால் | 840/- |
| | | **மொத்தம்** | **28850/-**<br>**(திரு.பால்தாஸ்)** |
| 13 | 14.11.2021 | தண்ணீர் பாட்டில் | 615/- |
| 14 | 15.11.2021 | தண்ணீர் பாட்டில் | 1765/- |
| 15 | 16.11.2021 | தண்ணீர் பாட்டில் | 2906/- |
| | | **மொத்தம்** | **5286/-**<br>திரு.அஸ்லி |

மேற்காணும் தொகைகளில் திரு.பால்தாஸ் என்பவருக்கு மளிகை பொருட்கள், காய்கறிகள், பால் மொத்தம் சேர்த்து ரூ.28850/- மற்றும் திரு.அஸ்லி என்பவருக்கு தண்ணீர் பாட்டில், தட்டு ஆகியவற்றிற்கு ரூ.5286/-ம் இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1332/2021/எச்1

**தீர்மானம் எண்.2619 அனுமதிக்கப்படுகிறது**

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் நவம்பர் மாத அவசரக்கூட்டம் 29.11.2021 ஆம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (என்.எஸ்) துறை அரசாணை (Ms) எண். 71 நாள் 13.01.2021-ன் படி, இந்நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2021-22-ன் கீழ், , ரூ.4.60 இலட்சம் மதிப்பீட்டில், (அரசு நிதி ரூ.3.08 இலட்சம் + பொது மக்கள் பங்களிப்பு ரூ.1.52 இலட்சம்) வார்டு எண்.11-ல் துறைமுகத்தெரு போர் வெற்றித்தூண் பூங்கா மேம்பாட்டு பணியினை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டு, திரு.அற்புதம் குடும்பத்தாரால் பொது மக்கள் பங்களிப்பு தொகை ரூ.1.52 இலட்சம் தொகையினை வழங்குவதற்கு ஒப்புகொள்ளப்பட்டது. அதன்படி, மேற்படி தொகை ரூ.1.52 இலட்சம் வங்கி கேட்பு வரைவோலை எண்.368750 நாள் 29.11.2021, தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி குளச்சல் கிளையின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்க கேட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைக்குமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1845-1/2021/இ1

**தீர்மானம் எண்.2620 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை கடிதம் ந.க.எண்.19089/2021/இ2 நாள் 19.11.2021-ல் 10.11.2021 அன்று நடைபெற்ற 8th Empowered committee கூட்டத்தில் சமுதாய கழிவறைகள் மற்றும் பொது கழிவறைகள் மறு சீரமைப்பு பணிகளை Operation and Maintenance Gap Filling Interest Fund-ன் அடிப்படையில் சமுதாய மற்றும் பொது கழிவறைகளில் மறு சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு முன்னர் NGO/Residential Welfare Association (RWA/ Appropriate agencies உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்து கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகரட்சிக்கு, சமுதாய மற்றும் பொது கழிவறைகளின் மறுசீரமைப்பிற்காக ரூ.7.50 இலட்சம் (1 சமுதாய கழிவறை ரூ.1.50 இலட்சம் + 4 பொது கழிவறைகள் ரூ.6.00 இலட்சம்) என நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் விவரங்கள் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1127/2021/இ1

**தீர்மானம் எண்.2621 அனுமதிக்கப்படுகிறது**